Nic-mail
05/07/23,
4:11 PM

வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி. எல். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,

ந.க.எண்:989/மா93/ஒபக/2023-2024, நாள்: 05.07.2023

பொருள்: பள்ளிக் கல்வி – மாநில மதிப்பீட்டு புலம் – மாவட்டம் தோறும் 6 முதல் 12 வகுப்பு வரை வளரறி மதிப்பீடு சார்ந்த வினாடி வினா நடத்துதல், வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் பயிற்சி அளித்தல் – சார்ந்து.

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் இணைச் செயல்முறைகள், சென்னை-06, ந.க.எண்.6519/G3/2023, நாள்:05.07.2023.

--------

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம், பார்வையில் கண்ட செயல்முறைகளின்படி, அரசின் முன்னோடித் திட்டங்களில் ஒன்றான "மாநில மதிப்பீட்டுப் புலம்" அரசாணை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பார்வையில் காணும் கூட்டக்குறிப்புகளில் கூறப்பட்டுள்ளவாறு உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கணினி வழி வினாடி வினா நடத்துதல் தொடர்பாக பின்வரும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. அனைத்து உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் இணைப்பு-1 இல் உள்ளவாறு 10.07.2023 முதல் படிப்படியாக 6 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான வினாடி வினா நிகழ்வுகளை நடத்த வேண்டும்.
2. வட்டார அளவில் பயிற்சி பெற்ற தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள், 6 முதல் 12 வரை கையாளும் அனைத்து வகுப்பு ஆசிரியர்களும் இப்பயிற்சியை 07.07.2023 அன்று மாலைக்குள் நடத்திட வேண்டும்.
3. இப்பயிற்சியை உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அரசுப் பள்ளிகளில் நடத்த வேண்டும்.
4. உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில் ஏற்படும் தொழில்நுட்பக் குறைபாடுகள், வினாத்தாள்களை உருவாக்கும்போது ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண 14417 என்ற கட்டணமில்லாத் தொலைபேசிச் சேவையைப் பயன்படுத்த ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

5. உயர் தொழில் நுட்ப ஆய்வகம் அமைந்துள்ள பள்ளிகளில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் இணைப்பு – 2 இல் உள்ள வழிமுறைகளில் புலமை பெற்றிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
6. உயர்தொழில்நுட்ப ஆய்வகம் வழியாக இனி வரும் நாட்களில் தொடர்ச்சியாக வினாடி வினா / வளரறி மதிப்பீடுகள் நடைபெறும்.

மேற்குறிப்பிட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் இணைப்பில் உள்ள கால அட்டவணையை பின்பற்றி 6 முதல் 12 வகுப்பு வரை வளரறி மதிப்பீடு சார்ந்த வினாடி வினாவை எவ்வித இடர்பாடுமின்றி அனைத்து மாணவர்களை பங்கேற்கும் வகையில் இவ்வினாடி வினா நடத்திட அனைத்து தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. வாராந்திர வளரறி மதிப்பீடு நடத்துவதற்கான அட்டவணை.
2. வழிகாட்டு நெறிமுறைகள்.

05/07/24

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்/
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம் – 6

5.7.23

பெறுநர்:

அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப்
பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

1. மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பலாகிறது.
2. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
3. முதல்வர் DIET இராணிப்பேட்டை.
4. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.